॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே நம: ॥

॥ ஸ்ரீமதே ஹயக்ரீவாய நம: ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனருளிச்செய்த

த்ருதீய ரஹஸ்யம்.

ஸ்ரீ ஸார ரஹஸ்ய பதவீ.

ஸ்ரீமத் ரஹஸ்ய பதவீ.

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥
ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்ய பூஷணம் ।
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம் ॥

சீரொன்று தூப்புற் றிருவேங்கடமுடையான்
பாரொன்றச்சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானேயமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

ஸநாதிகாரும் ஸம்ஸரித்துப்போந்த ஜீவாத்மாக்களு

இப்படிக் கீழ்த் தத்வபதவீ என்னும் ரஹஸ்யத்தில் தத்வங்களை விஶதமாக நிரூபித்து ஹிதத்தையும் புருஷார்த்தத்தையும் கடைசி வாக்யத்தில் ஸங்க்ரஹமாக அருளிச்செய்து இவ்வர்த்தங்களெல்லாம் வேதாந்த ஶாஸ்திரங்களில் விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டிருப்பதை ரஹஸ்யத்ரயங்கள் ஸங்க்ரமாக ப்ரகாஶிப்பிக்கின்றன என்று ரஹஸ்யத்ரயங்களின் ஸாரார்த்தங்களை இந்த ரஹஸ்ய பதவீ என்னும் ரஹஸ்யத்தில் ஸங்க்ரஹேண நிரூபிக்கிறார். இத்தால் கீழ் ரஹஸ்யத்திற்கும் இந்த ரஹ

டைய உஜ்ஜீவநாய-ுமாக அத்யாத்மசாஸ்த்ரங்கள் தத்வஹித புருஷார்த்தங்களை ப்ரதிபாதிக்கும். அவற்றை ஸங்க்ரஹேண ரஹஸ்யத்ரயம் ப்ரகாசிப்பிக்கும். இவற்றில்

ஸ்யத்திற்கும் ஸங்கதி ஸூசிப்பிக்கப்பட்டதாகிறது. எங்ஙனே யென்னில்:—அத்யாத்மசாஸ்திரங்களில் ப்ரதிபாதிக்கப்படுகிற தத்வஹித புருஷார்த்தங்களை நிரூபித்தபிறகு அவ்வர்த்தங்கள் இந்த ரஹஸ்யத்ரயங்களிலும் நிரூபிக்கப்படுகிறபடியினால் அவை ஸங்க்ரஹிக்கப்படுகிறது என்கிற ஸங்கதி அறியத்தக்கது.

'அநாதிகாலம் ஸம்ஸரித்துப்போந்த' என்பதற்கு ப்ரளய தசையில் ப்ரக்ருதியோடு பிரிக்கமுடியாத ஸம்பந்தத்தை யடைந்தும், ஸ்ருஷ்டி தசையில் சரீரம், ஆத்மா, முதலிய ஸம்பந்தத்தை யடைந்தும், இப்படி ஸ்ருஷ்டி ப்ரளயதசைகளிலும் ப்ரக்ருதியோடு சேர்ந்து ஜ்ஞானத்தின் சுருக்கம் முதலியவைகளை அநாதிகாலமாயடைந்திருக்கிற என்றர்த்தம். 'ஸம்ஸரித்துப்போந்த' என்பதற்கு ஸம்ஸாரத்தை யடைந்து நிற்கிற அதாவது இவ்விடத்தில் அவித்யா கர்ம ருசி வாஸனா ப்ரக்ருதி ஸம்பந்தங்களை யடைந்திருக்கிற என்றர்த்தம். 'உஜ்ஜீவநாய-ுமாக' என்பதற்கு இவர்களை உஜ்ஜீவிக்கச் செய்வதற்காக, அதாவது அவித்யா கர்மாதிகள் நிச்சேஷமாக நிவ்ருத்தியடைவதற்காக என்றர்த்தம். 'அத்யாத்மசாஸ்த்ரங்கள்' என்பதற்கு அதி, ஆத்மா ஆத்மாவைப்பற்றிய சாஸ்திரங்கள், அதாவது ஜீவாத்ம பரமாத்மாக்களைப்பற்றிச் சொல்லுகிற வேதாந்த சாஸ்திரங்கள் என்றர்த்தம். 'தத்வஹிதபுருஷார்த்தங்களை' என்கிற இடத்தில் 'தத்வங்கள்' என்பவை ஜீவாத்மா, பரமாத்மா, அசேதனம், ஆகிற சிதசிதீச்வர தத்வத்ரயங்கள். 'ஹித' மாவது மோக்ஷத்திற்கு ஸாதனமாக சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட பக்தி ப்ரபத்திகள். 'புருஷார்த்த'மாவது அந்தப் பக்தி ப்ரபத்திகளினால் அடையவேண்டிய மோக்ஷம். 'அவற்றை' என்பதற்குக்கீழ்ச் சொல்லப்பட்ட தத்வஹித புருஷார்த்தங்களை என்றர்த்தம். 'ரஹஸ்யத்ரய'மாவன திருமந்திரம், த்வயம், சரமச்லோகம் என்பவை. 'இவற்றில்' என்பதற்கு இந்த

திருமந்த்ரம் ஸர்வஸங்க்ரஹம். இதுதான் மூன்று வாக்யமாய் எட்டுத் திருவக்ஷரமாயிருக்கும். இதில் ப்ரதமவாக்யமான ப்ரணவம் ஸாரதமஸங்க்ரஹம். இது மூன்று வாக்யமாய் மூன்றக்ஷரமாயிரு

ரஹஸ்ய த்ரயத்தில் என்றர்த்தம். 'திருமந்த்ரம் ஸர்வஸங்க்ரஹம்' என்பதற்கு த்வயம் சரமஶ்லோகம் இவைகளில் ஜீவாத்மாவைப்பற்றி நாரஶப்தத்திலும், ஆ என்னும் பதத்திலும் சொல்லியிருந்தபோதிலும் ஜ்ஞாத்ருத்வ ஶேஷத்வாதி தர்மங்களை ஸ்பஷ்டமாய் நிரூபிக்கவில்லை. த்வயத்திலிருக்கும் நமஶ்ஶப்தம் அநிஷ்டங்கள் முழுமையும் ப்ரதிபாதிக்கவில்லை. அப்படியே சரமஶ்லோகத்தில் ஸர்வபாபநாஶம் கண்டோக்தமானாலும் கைங்கர்யமாகிற பலம் சொல்லப்படவில்லை. இக்குறைகளொன்றுமின்றிக்கே சிதசிதீஶ்வர தத்வத்ரயங்களையும் அவைகளின் ஸ்வரூபநிரூபகதர்மங்களோடு விஶதமாகத் தனித்தனியே நிரூபிக்கிறது திருமந்திரம். ஆகையினால் 'ஸர்வஸங்க்ரஹம்' என்பதற்கு தத்வஹித புருஷார்த்தங்களில் அவஶ்யமறியவேண்டிய அம்ஶங்களெல்லாவற்றையும் ஸங்க்ரஹிக்கிறது திருமந்திரம் என்றர்த்தம். மேல் திருமந்திரத்தின் பதங்களைப் பிரித்துக்காட்டுகிறார்—'இதுதான்' என்றாரம்பித்து. 'இதுதான்' என்பதற்கு இந்தத் திருமந்திரம் தான் என்றர்த்தம். 'மூன்று வாக்யமாய்' என்பதற்கு மூன்று வாக்யமாய் என்றர்த்தம். அநேக பதங்களின் சேர்க்கை ஒருவாக்யம். ப்ரணவத்தில் உள்ளடங்கிய மூன்றக்ஷரங்களும் மூன்று பதங்களாக நிரூபிக்கப்படுகிறபடியினாலே 'மூன்றுவாக்யமாய்' என்பதற்கு மூன்று வாக்யமாய் என்றர்த்தம் சொல்லப்பட்டது. இப்படியே ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் திருமந்திராதிகாரத்தில் 'ஏகவாக்யமான போது' என்றும், 'வாக்யத்வயமானபோது' என்றும், 'வாக்யத்ரயமானபோது' என்றும் அருளிச்செய்யப்பட்டிருப்பதினால் மூன்றுபதங்களும் மூன்று வாக்யங்களாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. 'இதில் ப்ரதமவாக்யமான ப்ரணவம் ஸாரதமஸங்க்ரஹம்' என்பதற்கு ஜீவாத்ம பரமாத்ம தத்வங்களையும், அவர்களுடைய ஜகத்காரணத்வ அணுபரிமாணாதிகளான ஸ்வபாவ விஶேஷங்களையும், ஶேஷ ஶேஷி பாவம் முதலிய ஸம்பந்தங்களையும், ஶப்தத்தினாலேயே ப்ரதிபாதிக்கையாலும், ஜீவத்மாவே

க்ரும். இதில் ப்ரதமாக்ஷரம் ஸர்வகாரணபூதனாய், ஸர்வரக்ஷகனாய், நித்ய நிருபாதிகசேஷத்வ ப்ரதிஸம்பந்தியான ஸ்ரிய:பதியைச் சொல்லுகிறது. இதில் பதா—

பகவானுக்குச் சேஷபூதன் என்றேற்பட்டதினால் அவனுக்கு வசப்பட்ட அசேதனமும் பகவானுக்குச் சேஷபூதமென்று அர்த்தம் ஸித்திக்கிறபடியினாலும், அவன் ரக்ஷகன் என்பதினால் ஸித்தோபாயத்தின் ப்ராதான்யம் சொல்லப்படுகிறபடியினாலும், ரக்ஷகத்வம் ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தி, ஸர்வ இஷ்ட ப்ராப்தியாகையினால் புருஷார்த்தம் அர்த்தாத் ப்ரதிபாதிதமாகையினாலும் எல்லாம் ஸங்க்ரஹிக்கப்பட்டதாகிறது என்று தாத்பர்யம். இதில் பதங்களின் பிரிவை நிரூபிக்கிறார்—'இதில்' என்றாரம்பித்து. அதாவது ப்ரணவத்திலிருக்கும் மூன்றக்ஷரங்களும் மூன்று பதங்கள் என்று தாத்பர்யம். 'இதில் ப்ரதமாக்ஷரம்' என்றது அகாரத்தை. 'ஸர்வகாரணபூதனாய்' என்பதற்கு 'ஸத்த்வம் ரஜஸ்தம இதி குணாஸ்ஸ காரணஸ்ய ஸமாவ்ருதா: । ஸத்த்வாத்யாஸ்து குணாஸ்ஸர்வே ஹ்ருணோஷி ஸமாவ்ருதா: வாச்யவாசகஸம்பந்தஸ்தயோரர்த்தாத் ப்ரதீயதே', என்கிற வாமன புராணவசனத்தினாலே ஸர்வகாரணபூதமான வஸ்து அகாரத்தினால் சொல்லப்படுகிறது என்று தாத்பர்யம். 'ஸர்வரக்ஷகனாய்' என்பதற்கு 'அவ ரக்ஷணே' என்கிற தாதுவினாலேற்பட்டதாகையினாலும், இன்னாரை ரக்ஷிக்கிறான் என்று சொல்லப்படாமையினாலும் ஸர்வரக்ஷகனென்றேற்படுகிறது என்று தாத்பர்யம். 'நித்ய நிருபாதிகசேஷத்வ ப்ரதிஸம்பந்தியான' என்பதற்கு அகாரத்தின் மேலேறி லோபித்திருக்கும் நான்காம்வேற்றுமை சேஷத்வமாகிற ஸம்பந்தத்தைச் சொல்லுகிறபடியினாலும், அது இன்ன காலத்தில் என்றும், இன்ன காரணத்தினால் என்றும், சொல்லப்படாமையினால் நித்யமாயும் நிருபாதிகமாயுமிருக்கிறதென்று ஏற்படுகிறபடியினால் அப்படிப்பட்ட சேஷத்வமாகிற ஸம்பந்தத்திற்கு ப்ரதிஸம்பந்தி அகாரவாச்யனான பகவானென்றேற்படுகிறது என்று தாத்பர்யம். எவனுக்கு ஜீவாத்மா சேஷபூதனோ அவன் 'ப்ரதிஸம்பந்தி' என்னப்படுகிறான். 'ஸ்ரிய:பதியைச் சொல்லுகிறது' என்ப

சதுர்த்தி ஶேஷத்வமாகிற ஸம்பந்தத்தைக் காட்டுகிறது. த்விதீயாக்ஷரம் இஸ்ஸம்பந்தத்தை மற்றொருவரோடே துவக்கற நிய

தற்கு 'உபாயிஷ்டாநம் தேவாநாம் ஶேஷிணம்', 'ஜகத: ஸர்வஶேஷைகஶேஷீ', 'லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேஶோ தேவ்யா காருண்யரூபயா । ரக்ஷகஸ்ஸர்வஸித்தாந்தே வேதாந்தேபி ச கீயதே', 'அஸ்யா மம ச ஶேஷம் ஹி விபூதிருபயாத்மிகா' என்றிவை முதலிய ப்ரமாணங்களில் இவர்களிருவரும் ஶேஷிகள் என்று நிரூபிக்கப்படுகிறபடியினால் ஶேஷிகளில் ஒருவரைச் சொன்னபோதிலும் ஸந்நியோகஶிஷ்ட ந்யாயத்தாலும், 'தேநைவ ஸார்த்தம் வாஸுதேவம் ந வ்யூஹமஹிஷ்யதே ஶ்ருதிரபி' என்கிற ந்யாயத்தாலும் இருவரும் அர்த்தாத் ஸித்தர்கள் என்று தாத்பர்யம். 'இதில் சதுர்த்தி' என்பதற்கு இந்த அகாரத்திலேறி லோபித்துக்கிடக்கிற நான்காம் வேற்றுமை என்றர்த்தம். 'ஶேஷத்வமாகிற ஸம்பந்தத்தைக்காட்டுகிறது' என்பதற்கு 'தாதர்த்யே சதுர்த்தீ' என்று வ்யுத்பன்னமாகையினால் தாதர்த்யம் ஶேஷத்வமாகையினாலே இங்கு அது விவக்ஷிதம் என்று தாத்பர்யம். ஸம்பந்தத்தைச் சொல்லுகிறது என்று சொல்லாமல் 'காட்டுகிறது' என்றருளிச்செய்திருப்பதின் தாத்பர்யமாவது நான்காம் வேற்றுமையே இங்கில்லாமையினால் இல்லாத சதுர்த்தி ஒரு அர்த்தத்தை எப்படிச்சொல்லும்? ஆகையினால் சதுர்த்தி விபக்தி லோபித்துக்கிடக்கிறதென்று தெரிந்துகொண்டு அதின் அர்த்தத்தையும் சேர்த்து அகாரமே லக்ஷணையாகச் சொல்லுகிறது என்று சொல்லவேண்டுமாகையினால் லோபித்திருக்கிற சதுர்த்தி கேவலம் தாத்பர்யக்ராஹகம் என்று தாத்பர்யம். 'த்விதீயாக்ஷரம்' என்பதற்கு ப்ரணவத்தில் நடு அக்ஷரமாகிய உகாரம் என்றர்த்தம். 'இஸ்ஸம்பந்தத்தை' என்பதற்கு இந்த ஶேஷத்வமாகிற ஸம்பந்தத்தை என்றர்த்தம். 'துவக்கற' என்பதற்கு ஸம்பந்தமில்லாமலிருக்கும்படி என்றர்த்தம். 'நியமிக்கிறது' என்பதற்கு ஸ்ரிய:பதிக்கும் நமக்குமே இந்த ஶேஷத்வ ஸம்பந்தமென்று கட்டுப்படுத்துகிறது என்றர்த்தம். இத்தால் உகாரத்திற்கு அவதாரணமும் அந்யயோக வ்யவச்சேதமும் அர்த்தமென்றருளிச் செய்யப்பட்டது. 'த்ருதீயாக்ஷரம்' என்

[illegible], த்ருதீயாக்ஷரம் ஶேஷத்வாஶ்ரயத்திற் காரண்யனாய், [illegible]ணீயனாய், ஜ்ஞாநாநந்தஸ்வரூபகுணனாய், அணு

[illegible] ப்ரணவத்தின் மூன்றாவது அக்ஷரமான மகாரம். 'ஶேஷ ஶ்ரயத்திற்காரண்யனாய்' என்பதற்கு ஸ்ரிய:பதியைக் குறித்துச் சேஷபூதன் எவனோ அப்படிப்பட்டவனாய் என்றர்த்தம். 'ரக்ஷணீயனாய்' என்பதற்கு அகாரத்தில் ரக்ஷகன் என்னும் அர்த்தம் சொன்னபிறகு யாரை ரக்ஷிக்கிறான் என்கிறகேள்வி உண்டாகிறபடியினால் அப்படி ஸ்ரிய:பதியினால் ரக்ஷிக்கப்படுகிற ஜீவாத்மா இங்கு சொல்லப்படுகிறான் என்பது உசிதம். ஆகையினால் அவனால் ரக்ஷிக்கப்படுகிற என்று தாத்பர்யம். 'ஜ்ஞாநாநந்தஸ்வரூபகுணனாய்' என்பதற்கு ஜ்ஞானம், ஆநந்தம், இவைகளை ஸ்வரூபமாகவும், குணமாகவும் உடையவனாய் என்றர்த்தம். அதாவது ஜீவாத்மாவின் ஸ்வரூபம் ஜ்ஞானாநந்தமானது. தனக்குத்தானே நான் என்று தோன்றுகிறபடியினால் ஜ்ஞானஸ்வரூபன். அப்படித் தோன்றும் பொழுது ஒருவனுக்கும் தன்னுடைய ஆத்மா ப்ரதிகூலமாய்த் தோன்றுகிறதில்லையாகையினால் ஆநந்தஸ்வரூபன். அப்படியே ஜ்ஞானமென்கிற குணமுண்டு. அதுவும் ஸ்வபாவத்தில் அநுகூலமாகவே தோன்றுகிறது. ஆனால் சில ப்ரதிகூலங்களாயும் சில அநுகூலங்களாயும் தோன்றுவது ஸ்வபாவத்தினாலன்று. கர்மத்தினாலேற்பட்டது. ஆகையினால் ஜீவாத்மா ஜ்ஞானத்தை ஸ்வரூபமாகவும் குணமாகவும் உடையவன் என்றேற்பட்டது. இவை இரண்டும் 'மனஜ்ஞானே', 'மனவபோதனே' என்கிற தாதுவிலிருந்து நிஷ்பன்னமான மகாரத்திற்கு அர்த்தமாயிற்று என்று தாத்பர்யம். 'அணுவாய்' என்பதற்கு மிகவும் சிறிய பரிமாணமுள்ளவனாய் என்றர்த்தம், 'மன பரிமாணே' என்று தாதுவாகையினால். அதில் பொதுவாகப் பரிமாணம் மாத்திரம் சொல்லப்பட்டிருந்த போதிலும் ப்ரமாணாந்தரங்களில் ஜீவாத்மா அணு என்று நிரூபிக்கப்பட்டிருப்பதினால் அந்த அர்த்தம் இங்கு கிடைக்கிறது என்று தாத்பர்யம். 'தேஹாதிவிலக்ஷணனை' என்பதற்கு மகாரம் இருபத்தைந்தாவது எழுத்தாகையினால் அதற்கு இருபத்தைந்தாவது தத்வமாகிற ஜீவாத்

வாய், ஜௌஹாஜிவிலக்ஷணனை ஜீவாத்மாவைச் சொல்லு கிறது. ஆக இப்ப்ரணவத்தால் 1 ' கண்ணபுரமொன்றுடையா

மா அர்த்தமென்று நிரூபிக்கிற அக்ஷர நிருக்த ப்ரகாரம் ப்ரக்ருதி தத்வங்களாகிற இருபத்து நான்கைவிட வேறுபட்டவனென என்று தாத்பர்யம். 'ஜீவாத்மாவைச் சொல்லுகிறது' என்ப தற்கு நிர்வசனத்தாலும், வ்யாகரண நிருக்தியினாலும், ப்ர மாண பலத்தினாலும் சொல்லுகிறது என்று தாத்பர்யம். இப் படி ப்ரணவத்தின் மூன்று அக்ஷரங்களுக்கும் தனித்தனியே அர்த்தத்தை நிரூபித்து அதை ஒரு வாக்யமாக அனுஸந்தித்து அதிலேற்பட்டதும், அவஶ்ய மனுஸந்தேயமுமான அர்த்தத்தை யருளிச் செய்கிறார்—'ஆக இப்ப்ரணவத்தால்' என்றாரம்பித்து. 'இப்ப்ரணவத்தால்' என்பதற்குத் திருமந்திரத்தில் சேர்ந்திருக் கிற ப்ரணவத்தால் என்றர்த்தம். ப்ரணவம் தனித்து மந்திர மாய் பரஸமர்ப்பணம் முதலியவைகளுக்குக் கரண மந்திரமாக ஏற்பட்டிருக்கும் ஸ்தலங்களில் அந்தந்த ப்ரகரணத்திற் கனு குணமாக அர்த்தாந்தரங்கள் விவக்ஷிதமாகலாம். ஆகையினால் திருமந்திரம் ஸ்வரூப போதகமான படியினாலே அதில் அந்தர் கதமான ப்ரணவத்திற்கு இவ்வளவே அர்த்தம் கொள்ளவேண் டும் என்று தாத்பர்யம். இவ்வர்த்தத்தில் ஸர்வேஶ்வரன் பக் கல் ஸர்வார்த்த க்ரஹணம் பண்ணின திருமங்கையாழ்வார் ஸ்ரீ ஸூக்தியை ப்ரமாணமாகக் காட்டியருளுகிறார்—'கண்ணபுர மொன்று' என்றாரம்பித்து. கண்ணபுரமொன்று - அத்விதீயமான ஸ்தலமாகிய திருக்கண்ணபுரம் என்கிற திவ்ய தேசத்தை, உடையானுக்கு - தனக்கு வாஸஸ்தானமாக உடைய ஶ்ரிய:பதிக் கு, அடியேன் - தாஸபூதனாகிய நான், ஒருவர்க்கு உரியேனோ - மற்றொருவர்க்குத் தாஸபூதனாகத் தகுந்தவனோ. இதில் 'அடி யேன்' என்கிறவரையில் ஶ்ரிய:பதிக்குத்தான் ஶேஷபூதனென் கிற அனுஸந்தானமும், 'ஒருவர்க் குரியேனோ' என்பதினால் அநந்யார்ஹத்வமும் அருளிச்செய்யப்பட்டது. இரண்டும் சேர்ந்து இந்த ஜீவாத்மா ஶ்ரிய:பதிக்கு அநந்யார்ஹ ஶேஷன் என்பதை நிஷ்கர்ஷிக்கிறது. 'கண்ணபுர' மென்பது உபலக்ஷண

---

1 பெரிய திருமொழி-8-9-3.

[illegible]யே னொருவர்க்குரியேனே' என்கிறபடியே உஜ்ஜீவாதார[illegible]னந்யார்ஹசேஷபூதனென்றதாயிற்று. உபயவிதிமான நமஸ்ஸு இரண்டக்ஷரமாய் இரண்டு பதமாய் நானெனக்குரியனல்லேன், என் ரக்ஷணத்திற்கு நிரபேக்ஷஸ்வதந்த்ரனுமல்லேன் என்கிறது. இங்கே பாகவதசேஷத்வம் ஸித்தம். இந்நமஸ்ஸுக்குச் சரணாகதியிலும் தாத்பர்யம். ஸுநிஷ்ட

மாய் உபய விபூதிகளும் அர்த்தமாகையினால் ஸர்வ சேஷித்வம் ஸர்வரக்ஷகத்வம் முதலியது அதில் த்யோதிதமென்று திருவுள்ளம். தான் நித்ய விபூதியைவிட்டு லீலா விபூதியில் சேதநர்களை ரக்ஷிப்பதற்காக அர்ச்சாவதார ரூபம் கொண்டு எழுந்தருளியிருப்பதைக் கண்டால் ஸர்வரக்ஷகனென்பதில் ஸந்தேஹமுண்டாவதற்கு ஹேதுவில்லை. இது ஆகாரத்தின் அர்த்தம். 'அடியேன்' என்பதினால் சதுர்த்தீ, மகாரம், இவைகளின் அர்த்தமும், 'ஒருவர்க் குரியேனே' என்பதினால் உகாரத்தினர்த்தமும், அடைவே விவரிக்கப்பட்டன. இவ்வர்த்தத்தையே நிகமனம் செய்கிறார்--'உஜ்ஜீவாதா' என்றாரம்பித்து. பிறகு நமச்சப்தார்த்தத்தை நிரூபிக்கிறார்—'உபயவிதமான' என்றாரம்பித்து. இது ந, மஃ, என்று இரண்டக்ஷரமாகவும், இரண்டு பதங்களாகவும் ஆகிறது. 'நான் எனக்குரியேனல்லேன்' என்னும்பொழுது ப்ரணவத்திலிருக்கும் மகாரத்தை அநுஷங்கித்து (இங்கு இழுத்துச்சேர்த்து)க்கொண்டும், சேஷித்வம் என்கிற பதத்தைச் சேர்த்துக் கொண்டும் அர்த்தம் சொல்லிக்கொள்ளவேண்டியது. 'என் ரக்ஷணத்திற்கு நிரபேக்ஷஸ்வதந்த்ரனுமல்லேன்' என்னும்பொழுது 'மஃ' என்பதோடு 'ஸ்வதந்த்ரம்' என்னும் ஒரு பதத்தைச் சேர்த்துக்கொண்டு இந்த அர்த்தம் ஏற்பட்டது என்று தாத்பர்யம். 'இங்கே பாகவதசேஷத்வம் ஸித்தம்' என்பதற்கு பகவானுக்குச் சேஷபூதன் என்பதும், தனக்குத்தான் ஸ்வதந்திரனல்லன் என்பதும் ஸ்பஷ்டமாக ஏற்பட்ட பிறகு பகவானுக்கு இஷ்டவிநியோகார்ஹனா யிருக்கிறபடியினால் பாகவத சேஷத்வமும் ஏற்பட்டது என்று தாத்பர்யம். 'இந்நமஸ்ஸுக்கு சரணாகதியிலும் தாத்பர்யம்' என்பதற்கு ஸ்தூலம், ஸூக்ஷ்மம், பரம்,

நிவ்ருத்தியை ப்ரார்த்திக்கிறதாகவுமாம். இப்படி 'நமஸ்ஸ' ந்தனிலே தத்வ ஹித புருஷார்த்த ப்ரகாசனமுண்டு. நாராயண சப்தம் நாரங்களுக்கு அயநமென்றும், நாரங்களை அயநமாகவுடையவனென்றும், ஸர்வாந்தர்யாமித்வாதி விசிஷ்ட

என்கிற மூன்றுவித யோஜனைகளை நிரூபிக்கும்பொழுது ஸ்தூல யோஜனையில் அங்கபஞ்சகத்தோடுகூடிய பரந்யாஸம் தாத்பர்ய மென்று அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் வ்யாக்யானம் செய்திருப் பதினால் என்று தாத்பர்யம். 'ஸநிஷ்ட நிவ்ருத்தியை ப்ரார்த்திக் கிறதாகவுமாம்' என்னும்பொழுது 'கிம்வித ஸ்யாஸ்' என்கிற பதங் களைச் சேர்த்துக்கொண்டு 'எனக்கு ஒருவித அநிஷ்டமுமிருக்கக் கூடாது' என்று யோஜனை சொல்லிக்கொள்ள வேண்டியது. அப்பொழுது பல தசையில்வரும் ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தியும் ப்ரார்த்திக்கப்படுகிறதென்று திருவுள்ளம். 'இப்படி நமஸ்ஸந்தன் னிலே தத்வ ஹித புருஷார்த்த ப்ரகாசனமுண்டு' என்ப தற்குதான் தனக்குச்சேஷபூதனல்லன், தனக்கொன்றையும் பற்றி ஸ்வாமித்வமில்லை என்கிற யோஜனையில் தத்வமும், சரணாகதி யைச் சொல்லுகிற யோஜனையில் ஹிதமும், அநிஷ்ட நிவ்ருத்தி யை ப்ரார்த்திக்கிற யோஜனையில் புருஷார்த்தமும், நமஸ்ஸில் ப்ரகாசிக்கப்பட்டது என்று திருவுள்ளம். ஸர்வாநிஷ்டங்களும் நிவ்ருத்தித்தால் புருஷார்த்தமாகிற கைங்கர்யம் தன்னடையே வரும், தனித்து ப்ரார்த்திக்கவேண்டியதில்லை என்று த்வயாதி காரத்தில் அருளிச்செய்திருக்கும் அர்த்தம் தெரிவிக்கப்பட் டது. மேல் நாராயண சப்தத்திற்கு வ்யாக்யானமருளிச் செய் கிறார்—'நாராயண சப்தம்' என்றாரம்பித்து. 'நாரங்களுக்கு அயநம் என்றும்' என்பது தத்புருஷ ஸமாஸம். 'நாரங்களை அயநமாகவுடையவன் என்றும்' என்பது பஹுவ்ரீஹி ஸமாஸம். ஸர்வாந்தர்யாமித்வாதி' என்கிற இடத்தில் 'ஆதி' சப்தத்தி னால் ஸர்வ வ்யாபகத்வம், ஸர்வசரீரித்வம், ஸர்வசப்த வாச்யத் வம், முதலியவை சேர்த்துக்கொள்ளப் படுகின்றன. 'நாரங் களுக்கு அயநம்' என்கிற வ்யுத்பத்தியில் ஸர்வாதாரத்வம், ப்ராப்யத்வம், ப்ராபகத்வம் முதலியதும், 'நாரங்களை அயந மாகவுடையவன்' என்கிற வ்யுத்பத்தியில் ஸர்வ வ்யாபகத்வமும்

ருண ஸ்ரீய:பதியைச் சொல்லுகிறது. இதில் வதாயித்ரு காரீயத்தை முன்னிட்டுக்கொண்டு அதின் ஹேதுமான கைங்கர்யத்தைக் காட்டுகிறது. இத்தால் [1] 'ஒழிவில்காலமெல்லா முடனாய் மன்னிவழுவிலாவடிமை செய்யவேண்டு நாம்' என்ற

இவை இரண்டினாலும் ஸர்வ ஶரீரித்வமும், ஸர்வஶப்த வாச்யத்வமும் பலிக்கின்றன. நாரஶப்தத்தில் ஜகத்காரணத்வாதிகளும் ஏற்படுகிறது. 'இதில்' என்றாரம்பிக்கும் வாக்யத்தின் கருத்தாவது—தாஸ்யம் ப்ரணவத்திலேயே அருளிச்செய்யப் பட்டபடியினால் அதையே மறுபடியும் இங்கே சொல்லுவது ப்ரயோஜனமற்றதாகையினால் அதின் கார்யமான கைங்கர்யத்தை லக்ஷணையாகக் குறிக்கிறது—என்பது. இதில் 'ஸ்யாம்' என்கிற ப்ரார்த்தனையைச் சொல்லுகிற ஒரு பதத்தைச் சேர்த்துக் கொண்டு ஶ்ரிய:பதியாகிற நாராயணனைப் பற்றக் கிங்கரனாகக் கடவேன் என்று யோஜனையைத் திருவுள்ளம்பற்றி அதற்கு ப்ரமாணமாக மயர்வற மதிநலமருளப்பெற்ற நம்மாழ்வார் ஸ்ரீ ஸூக்தியை உதாஹரிக்கிறார்—'இத்தால்' என்றாரம்பித்து. ஒழிவு இல்-விச்சேதமில்லாத, அதாவது இடைவிடாத, காலமெல்லாம் - எல்லாக்காலத்திலும், உடனாய் - ஸமீபத்திலேயே இருந்து, மன்னி - ஸ்திர ப்ரதிஷ்டிதனாயிருந்து, வழுவிலாவடிமை - வழுவுதல் இல்லாத, வழுவுதல் - விட்டுப்போதல், அடிமை - கைங்கர்யங்களை, நாம் செய்யவேண்டும்' என்றாழ்வார் ப்ரார்த்தித்திருப்பதினால் அதுவே திருமந்திரத்தின் அர்த்தம் என்பது உசிதம் என்று திருவுள்ளம். இதில் 'ஒழிவில் காலமெல்லாம்' என்பதினால் ஸர்வகாலத்திலும் என்றும், 'உடனாய்' என்பதினால் ஸர்வதேஶத்திலும் என்றும், 'மன்னி' என்பதினால் ஸர்வாவஸ்தைகளிலும் என்றும், 'வழுவிலா வடிமை' என்பதினால் ஸர்வவித கைங்கர்யங்களும் என்றும், ஆகச் சேர்ந்து ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்யங்களும் செய்யவேண்டும் என்றதாயிற்று. இதற்குப் பட்டருடைய ஸம்வாதத்தை உதாஹரித்தருளுகிறார்—'ஸுகாஶாய த்யஜாமியவ'

---

1 திருவாய்மொழி-3-3-1.

தாயிற்று. 1 'அகாரார்த்தாயைவ' என்கிற ஶ்லோகத்தை இங்கே அநுஸந்திப்பது.

இதி திருமந்த்ரார்த்தாதிகார: ஸம்பூர்ண:.

—

என்றாரம்பித்து. இது அஷ்டஶ்லோகீ ஶ்லோகம். 'இங்கே' என்பதற்கு திருமந்திரார்த்தம் முழுவதும் அருளிச்செய்யப் பட்ட பிறகு என்றர்த்தம். 'அகாரார்த்தாயைவ ஸ்வமஹமத மஹ்யம் ந நிவஹா நராணாம் நித்யாநாமயநமிதி நாராயணபதம்। யமாஹாஸ்மை காலம் ஸகலமபி ஸர்வத்ர ஸகலாஸ்வவஸ்தாஸ்வாவிஸ்ஸ்யுர்மம ஸஹஜ கைங்கர்யவிதய: ॥' என்று பூர்ணஶ்லோகம். இதின் அர்த்தமாவது—அஹம் - நான், அகாரார்த்தாயைவ – அகாரத்திற் கர்த்தமான ஶ்ரிய:பதியின் பொருட்டு, ஸ்வம் - ஶேஷ பூதன், அத - முழுமையும், மஹ்யம் ந - எனக்குச் ஶேஷபூதனல்ல, அதாவது நானும் என்னைச் சேர்ந்த வஸ்துக் களும், எனக்குச் ஶேஷ பூதமானவைகளல்ல. நராணாம் நிவஹா: - ஜீவாத்மாக்களின் ஸமூஹங்கள், (நாரங்கள் என்னப்படு கின்றன). நித்யாநாம் - நித்யங்களாகிய, அந்த நாரங்களுக்கு, அயநம் - ஆதாரம், இதி - என்று, நாராயணபதம் - நாராயண என்னும் பதம், யம் - எந்த ஶ்ரிய:பதியை, ஆஹ - சொல்லிற் றோ, அஸ்மை - அப்படிப்பட்ட ஶ்ரிய:பதியின் பொருட்டு, ஸகலமபி காலம் - எல்லாக் காலங்களிலும், ஸர்வத்ர - எல்லா இடங்களிலும், ஸகலாஸு - எல்லா, அவஸ்தாஸு - தசைகளி லும், மம - எனக்கு, ஸஹஜ - ஸ்வபாவத்திலேற்பட்ட, கைங் கர்யவிதய:-கைங்கர்யங்களின் அனுஷ்டானங்கள், ஆவிஸ்ஸ்யு: – உண்டாகவேண்டும்.

திருமந்திராதிகார வ்யாக்யானம் முற்றிற்று.

—

இப்படித் திருமந்திரத்தின் அர்த்தத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்து இதற்குமேல் த்வயத்தின் அர்த்தத்தை அரு

1 அஷ்டஶ்லோகீ-3.

இப்படி திருமந்த்ரத்தில் ஸங்க்ருஹீதங்களான தத்வஹித புருஷார்த்தங்களை விசதமாக்குகிறது த்வயம். இதில் பூர்வகண்டம் ஒரு வாக்யமாய் உபாயபரம். உத்தரகண்டம் இரண்டு வாக்யமாய் உபேயபரம். இவை ஓரோன்றும் மூன்று பதமாயிருக்கும். ப்ரதமகண்டத்தில் ப்ரதமபதம் மூன்று

ளிச்செய்யப்போகிறவராய் திருமந்திரத்திற் கனந்தரம் த்வயத்தை நிரூபிப்பதற்கு ஸங்கதியை யருளிச்செய்கிறார்—'இப்படி' என்றாரம்பித்து. 'விசதமாக்குகிறது த்வயம்' என்பதற்குத் திருமந்திரத்தில் சொல்லப்படுகிற பரதத்வமாகிற நாராயணனை தேவதாந்தரங்களைவிட வேறுபட்டவனாய் ஸ்ரிய:பதியான நாராயணன் என்று ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறது. நமஸ்ஸப்தத்தில் பொதுவாக ஸங்க்ரஹிக்கப்பட்ட உபாயம் ஸரணாகதியென்று ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறது. பரமபுருஷார்த்தமாகிற கைங்கர்யத்தையும் ஸ்ரிய:பதியினிடத்தில் செய்யப்படுவதென்றும், ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தி பூர்வகமென்றும் சொல்லுகிறது என்று தாத்பர்யம். இப்படித் திருமந்திரத்தில் ஸங்க்ரஹிக்கப்பட்ட பரதத்வம், பரமஹிதம், பரமபுருஷார்த்தம், இவைகளை வ்யக்த்யந்தர உபாயாந்தர ப்ராப்யாந்தர வ்யாவர்த்தமாய் தெளிவிக்கிறது த்வயமென்று திருமந்திரத்திற்குப் பிறகு அதன் விவரணமான த்வயம் வ்யாக்யானம் செய்யப்படுகிறது என்கிற ஸங்கதி தெரிவிக்கப் படுகிறது. 'உத்தரகண்டமிரண்டு வாக்யமாய்' என்பதின் கருத்தாவது—'ஸ்ரீமதே நாராயணாய' என்கிற பதங்களோடு உசிதமான க்ரியாபதத்தைச் சேர்த்துக்கொண்டு ஒரு வாக்யமாகவும், 'நம:' என்பதோடு உசிதமான க்ரியாபதத்தைச் சேர்த்துக்கொண்டு ஒரு வாக்யமாகவும் பிரித்துக்கொள்ளவேண்டும்—என்பது. 'இவை ஓரோன்றும் மூன்று பதமாயிருக்கும்' என்பதற்கு, பூர்வகண்டம் 'ஸரணம்' வரையில் ஒருபதமாயும், மற்ற இரண்டும் தனிப்பதங்களாய் மூன்று பதங்களாயும், உத்தரகண்டம் ஒவ்வொன்றும் தனித்தனியாய் மூன்று பதங்களாயும் இருக்கிறது என்று தாத்பர்யம். 'ப்ரதமகண்டத்தில் ப்ரதமபதம்' என்றாரம்பிக்கும் வாக்யத்தின் கருத்தாவது—பூர்வகண்டத்தின் முதல் பதம் 'ஸ்ரீமந்' 'நாராயண'

ஷங்கூட ஸுஸேவ்யமாயிருக்கும். இதில் ஸ்ரீ ஶப்தம் ஸர்வ-ருக்கும் ஆஶ்ரயணீயையாய் 1 ‘அகலகில்லேன்’ னென்கிறபடியே தன்னை ஆஶ்ரயித்திருக்கிற பெரிய பிராட்டியாரோடே பிரிவற்றவ னென்கிறது. நாராயண ஶப்தம் 1 ‘நிகரில் புகழாய்’ இத்யாதி களிற்சொன்ன வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌஶீல்ய ஸௌலப்யாதி

‘ஶரணௌ’ என்கிற மூன்று பதங்களின் ஸமாஸத்தினுலேற்பட்டதுஎன்பது. ‘இதில் ஸ்ரீ ஶப்தம்......பிரிவற்றவனென்கிறது’ என்கிற வாக்யத்திற்குத் தாத்பர்யமாவது—‘ஶ்ரீயதே ஸர்வை: நித்யம் ஶ்ரயதே ச பரம் பதம்’ என்கிற வ்யுத்பத்தியை திருவுள்ளம்பற்றிப் புருஷகாரத்வோபயுக்தமான மாத்ருத்வ ப்ரயுக்த வாத்ஸல்யாதிஶயம் ப்ரயோஜனமுள்ளதாகையினாலே அது இங்கு முக்கியமாக விவக்ஷிதமாகவேண்டும் என்பதையும் திருவுள்ளம்பற்றி, ஸர்வஜனங்களாலும் தான் ஆஶ்ரயிக்கத் தகுந்தவளாய்த் தான் பிரிந்திருக்கில் பகவான் ஸர்வருக்கும் அபிகந்தவ்யனாகமாட்டான் என்பதையும் திருவுள்ளம்பற்றி இத்தலையில் (நம்மிடத்தில்) வாத்ஸல்யாதிஶயத்தாலும் அத்தலையில் (பகவானிடத்தில்) வால்லப்யாதிஶயத்தினாலும் ஸர்வாபராதிகளுக்கும் ஆஶ்ரயணியாய்த் தானிருந்துகொண்டு அவனை விட்டுப்பிரியாமல் இருக்கிற இருப்பு அருளிச்செய்யப்பட்டிருக்கிறது—என்பது. மற்றைய வ்யுத்பத்திகளுக்கு இது உபலக்ஷணம். நாராயணஶப்தம் இந்தப் புருஷகாரமும் மிகுதியென்று சொல்லலாம்படி நிற்கிற ஶ்ரிய:பதியினுடைய கல்யாணகுணங்களைச் சொல்லுகிறது என்கிற அர்த்தத்தைத்தாம் திருவுள்ளம்பற்றி இந்த அர்த்தம் ஸம்ப்ரதாயஸித்த மென்பதற்காக ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியை உதாஹரித்தருளுகிறார்—‘நிகரில் புகழாய்’ என்றிவை முதலியவைகளினால். இங்கு ஶ்ரிய:பதிக்கு ஸௌலப்யோபயுக்தமான வாத்ஸல்யாதி குணவர்க்கங்களும், பரத்வோபயுக்தங்களான ஜகத்காரணத்வாதி வர்க்கங்களுமிருந்தபோதிலும் அவனுடைய உபாயபாவத்தைச் சொல்லுகிற பூர்வ கண்டத்தில் அந்த உபாயத்வத்திற்குபயுக்தங்களான வாத்ஸல்ய ஸௌலப்யாதி குணவர்க்கங்களே விவக்ஷிதங்கள் என்பது ‘நிகரில் புகழாய்’ என்கிறதினால் காட்டப்படுகிறது, பரத்வோப

---

1 திருவாய்மொழி-6-10-10.

களை யுடையவனான ஸவெஷ்வரனைச் சொல்லுகிறது. ஶரண ஶப்தம் ஶரணாவிஷயத்தில் க்ஷாமோதகாதிகளுக்காக தாஸஸ்தன் பற்றுந்துறையான திருவடிகளைக் காட்டுகிறது. 'ஶரணம்' என்கிற பதம் திருவடிகளுடைய உபாயபாவத்தைச் சொல்லுகிறது. 'ப்ரபத்யே' என்கிற பதம் அகிஞ்சநாதிகாரி ஶரணான் திருவடிகளை உபாயமாகக்கொண்டு மஹாவிஶ்வாஸாதி விஶிஷ்டஸாதநாவலம் பண்ணுகிறபடியை ப்ரகாஶிப்பிக்கிறது. 'ஶ்ரீமதே' என்கிற பதம் ப்ராபகனான நாராயணன் ப்ராப்யனுமாய்க்கொண்டு கைங்கர்ய

யுக்த குணங்களை 'உலக மூன்றுடையாய்' என்று மேலே தனித்தருளிச் செய்திருக்கிறபடியினால் இவ்விடத்தில் தாமும் வாத்ஸல்யாதிகுண வர்க்கங்களையே அபிப்ராயமாக வ்யாக்யானம் பண்ணியருளினார். 'ஶரணஶப்தம்' என்றாரம்பிக்கும் வாக்யத்தில் 'க்ஷாமோதகாதிகளுக்காக' என்கிற இடத்தில் 'ஆதி' என்பதினால் த்யானத்திற்கு ஸுலபமாய் கோசரமாகை, 'தவாம்ருதஸ்யந்தி' என்றிவை முதலியவைகளில் சொல்லப்படுகிற போக்யதாதிஶயம், ரக்ஷிப்பதையே ஸ்வபாவமாக உடைத்தாயிருக்கை, முதலியவைகள் அபிப்ரேதங்கள். 'தாஸஸ்தன் பற்றுந் துறை' என்பதற்குத் தாஸபூதன் ஆஶ்ரயிக்கும் பூர்வர்கள் நடந்த மார்க்கம், அதாவது பூர்வாசார்யர்கள் நடத்திக்காட்டிப் போந்த மார்க்கம் என்று தாத்பர்யம். 'குலதநம் குலதைவதம்' என்றல்லவோ பெரிய முதலியாரின் (ஸ்ரீ ஆளவந்தாரின்) அநுஸந்தானம். 'ப்ரபத்யே' என்கிற பதம்' என்றாரம்பிக்கும் வாக்யத்திற்கு உத்தம புருஷனால் அகிஞ்சனாதிகாரியும், 'பத்' என்னும் தாதுவினால் உபாயத்வ அத்யவஸாயமும், 'ப்ர' என்கிற உபஸர்க்கத்தினால் அந்த அத்யவஸாயமாகிற விஶ்வாஸத்தின் மஹத்வமும், இவை இரண்டினாலும் அங்கபஞ்சக விஶிஷ்டமான பரந்யாஸமும் ப்ரகாசிதமாயிற்று என்று தாத்பர்யம். இப்படி த்யோதிதமாகிறபடியை ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் த்வயாதிகாரத்தில் பரக்கக் கண்டு கொள்ளுவது. ப்ராப்யதசையிலும் ஶ்ரீவிஶிஷ்டனான நாராயணனே கைங்கர்யத்திற்கு உத்தேஶ்யன் என்பதைத் தெரிவிப்பதற்காக உத்தரகண்டத்திலும் 'ஶ்ரீமதே' என்னும் பதம்.

ப்ரதிஸம்பந்தியாம்போது பத்நீவிசிஷ்டனாயிருக்கும்படியைக் காட்டுகிறது. இங்குற்ற நாராயணசப்தம் ஸர்வப்ரகார விசிஷ்டனைக்கொண்டு நிரதிசயபோக்யனான ஸர்வசேஷியை ப்ரதிபாதிக்கிறது. இதின் சதுர்த்தியிலும் திருமந்த்ரத்தில் போலே கைங்கர்ய ப்ரார்த்தனையைக் கண்டுகொள்வது. இக்கைங்கர்யமும் ஸர்வ விரோதிரஹிதமானபடியை நமஶ்ஶப்தம் ப்ரகாசிக்கிறது. ஸ்ரீமானான நாராயணன் திருவடிகளில்

'இங்குற்ற நாராயணசப்தம்' என்பதற்குப் பூர்வகண்டத்தில் ப்ரயோஜன விசேஷத்திற் கனுகுணமாக ஸௌலப்யோபயுக்த குணங்கள் அர்த்தம் என்று நிரூபித்திருந்தபோதிலும் ப்ராப்ய வஸ்துவைச் சொல்லுகிற உத்தரகண்டத்திலிருக்கும் நாராயண சப்தம், குணவிக்ரஹ விபூத்யாதிகளினால் பரிபூர்ணமான ப்ரும்மமே ப்ராப்யமாகையினாலும், அப்படிப்பட்டதையே இங்கு சொல்லவேண்டியது உசிதமாகையினாலும், அப்படிப்பட்ட வஸ்துவைச் சொல்லக்கூடிய சக்தி இந்தப் பதத்திற்கு இருக்கிறபடியினாலும், ஸர்வாகாரத்தினாலும் பரிபூர்ணனான ஸ்ரிய:பதியைச் சொல்லுகிறது என்று தாத்பர்யம். 'இதின் சதுர்த்தியிலும்' என்றாரம்பிக்கும் வாக்யத்திற்குத் திருமந்திரத்தில் நாராயண சப்தத்தில் சதுர்த்திக்கு சேஷத்வமே அர்த்தம் சொல்லுவது புனருக்தமாகும் என்று சொல்லியிருப்பதினால் அதைப்போலவே இங்கும் ஸ்வாமித்வாதிகளைச் சொல்லுகிற நாராயணசப்தத்தினாலும் 'ப்ரபத்யே' என்னும் க்ரியாபதத்தில் உத்தமனாலும் மற்றும் அந்தந்த இடங்களில் சேஷத்வம் ப்ரகாசிதமாகிறபடியினால் புனருக்திவருகிறது. மேலும் ப்ராப்யத்தைச் சொல்லுகிற இடத்தில் சேஷத்வத்தைச் சொல்லுவது வ்யர்த்தமாகையினால் திருமந்திரத்தைப்போல் இங்கும் கைங்கர்ய ப்ரார்த்தனையை அர்த்தமாகக்கொள்ளவேண்டுமென்று தாத்பர்யம். மேலிருக்கும் நமஸ்ஸப்தம் கைங்கர்ய விரோதிகளான ஸர்வபாப நிவ்ருத்தியைச் சொல்லுகிறது என்று 'இக்கைங்கர்யமும்' என்றாரம்பிக்கும் வாக்யத்திற்குத் தாத்பர்யம். இப்படிப் பதங்களின் அர்த்தத்தை நிரூபித்து வாக்யத்தின் ஸமுதாயார்த்தத்தை யருளிச்செய்கிறார்—'ஸ்ரீமானான' என்றாரம்பித்து. 'களையற்ற'

களையற்ற நித்ய கைங்கர்யமும் பெறுகைக்கு ஸ்ரீமந் நாராயணன் திருவடிகளிரண்டையும் ஶரணமாகப் பற்றுகிறேனென்று இதில் திரண்டபொருள்.

இதி த்வயாதிகார: ஸம்பூர்ண:.

—

இப்படித் திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் ப்ரகாஶித்த உபாயத்துக்கு அகிஞ்சநாதிகாரிகத்வ நிரபேக்ஷத்வாதிகளைக் காட்டிக்கொண்டு விதிஶப்தத்தாலே உபஸம்ஹரணம்

என்பதற்கு ஸர்வபாபங்களாகிற களைகளில்லாமலும், ஸ்வாதீன கர்த்ருத்வ போக்த்ருத்வ ப்ரமங்களாகிற களைகளில்லாமலும் என்றர்த்தம். இந்த நிஷ்க்ருஷ்டார்த்தத்தினால் அர்த்தானுஸந்தானம் செய்யும்பொழுது உத்தரகண்டம் பூர்வத்ர அந்வயித்துக்கொள்ளவேண்டியது என்பது ஏற்பட்டது.

த்வயாதிகார வ்யாக்யானம் முற்றிற்று.

—

இப்படித் திருமந்திரம், த்வயம், இவைகளுக்கு வ்யாக்யானம் செய்தருளி பிறகு சரமஶ்லோகத்திற்கு வ்யாக்யானம் செய்யப் போகிறவராய் இவை இரண்டிற்கும் அநந்தரம் வ்யாக்யானம் செய்யவேண்டியதற்குக் காரணமாகிய ஸங்கதி விஶேஷத்தை யருளிச்செய்கிறார்—'இப்படி' என்றாரம்பித்து. 'ப்ரகாஶித்த உபாய'மாவது ப்ரபத்தி. 'நிரபேக்ஷத்வாதிகளை' என்பதில் 'ஆதி' ஶப்தத்தினால் பாபங்களின் ப்ராசுர்யம், அதின் ஸ்வஸங்கல்பமாத்ர நிவர்த்யத்வம், ப்ரபத்யநந்தர்காலம் வருகிற நிர்பரத்வம், முதலியவைகள் ஸங்க்ரஹிக்கப்படுகின்றன. 'காட்டிக்கொண்டு' என்பதற்கு இவைகள் திருமந்திரத்தில் ஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்திகளைச் சொல்லுகிற யோஜனை முதலியவைகளிலும், த்வயத்தில் 'ப்ரபத்யே' என்கிற உத்தமன் முதலியவைகளிலும் ஸங்க்ரஹிக்கப்பட்டதாயிருந்தபோதிலும் இதிற்போல் அவ்வளவு வ்யக்தமாகச் சொல்லப்படவில்லையாகையினால் அப்படி வ்யக்தமாக்கிக்கொண்டு என்று தாத்பர்யம். 'விதிஶப்தத்தாலே' என்பதற்கு விதிவாக்யமாக இருந்துகொண்டு

பண்ணுகிறது சரமஶ்லோகம். இது தான் மூன்று வாக்யமாய் பன்னிரண்டு பதமாயிருக்கும். இப்படி மந்த்ரத்ரயம் உத்தரோத்தரம் பதங்களிரட்டிப்பாய் விஶதீகரணமாயிருக்கும். இஶ்லோகத்தில் பூர்வவாக்யம் உபாய விதாயகம். உத்தர வாக்யம் ஃபலப்ரதிபாதகம். உத்தரவாக்யம் க்ருதக்ருத்யதா

என்றர்த்தம். 'உபப்ரும்ஹணம் பண்ணுகிறது' என்பதற்கு ஶ்ருதிகளில் ஶ்வேதாஶ்வதரத்தில் 'மோக்ஷத்திலாசையுடைய நான் ஶரணமாக வடைகிறேன்' என்றர்த்தமுள்ள வாக்யத்திலும், தைத்தரீயத்தில் அனேக தர்மங்களைச் சொல்லிவருகிற இடத்தில் 'எல்லாத் தர்மங்களையும்விட ந்யாஸம் என்று சொல்லப்படுகிற ஶரணாகதி மேலானது என்று சொல்லுகிறார்கள்' என்றர்த்தமுள்ள வாக்யத்திலும் சொல்லப்படுகிற ஶரணாகதியின் ப்ரகாரங்களை உபப்ரும்மணம் பண்ணுகிறது என்று தாத்பர்யம். 'இதுதான் மூன்று வாக்யமாய்' என்பதற்கு 'ஶரணம் வ்ரஜ' என்கிற வரையில் ஒருவாக்யமாகவும், 'மோக்ஷயிஷ்யாமி' என்கிற வரையில் ஒருவாக்யமாகவும், 'மாஶுச:' என்றொருவாக்யமாகவும் மூன்று வாக்யமாய் அநுஸந்தித்துக் கொள்ளவேண்டும் என்று தாத்பர்யம். 'இப்படி மந்த்ரத்ரயம் உத்தரோத்தரம் பதங்களிரட்டிப்பாய் விஶதீகரணமாயிருக்கும்' என்பதற்குத் திருமந்திரம் மூன்று பதமாய், த்வயம் ஆறுபதமாய், சரமஶ்லோகம் பனிரெண்டு பதமாய் கீழ் நிரூபித்தபடி ஒன்றுக்கொன்று வ்யாக்யானமாக இருக்கும் என்று தாத்பர்யம். 'உபாய விதாயகம்' என்பதற்கு உபாயத்தைப் பண்ணும்படி விதிக்கிறது என்றர்த்தம். 'பூர்வவாக்யம்' என்பதற்கு 'வ்ரஜ' என்கிற வரையிலுள்ள வாக்யம் என்றர்த்தம். ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தி பூர்வக பரிபூர்ணாநுபவஜநித கைங்கர்யமாகிற புருஷார்த்தத்தை உத்தரவாக்யம் சொல்லுகிறது. இங்கு 'ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்று அநிஷ்டநிவ்ருத்தி மாத்திரம் சொல்லப்பட்டிருந்தபோதிலும் கைங்கர்யபர்யந்த புருஷார்த்தம் தாத்பர்யத்தினாலேற்படுகிறதென்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் சரமஶ்லோகாதிகாரத்தில் நிர்ணீதம். 'க்ருதக்ருத்யதாவாசி' என்கிற இடத்தில் 'ஶுசி' ஶப்தத்தினால் அதினால் நிர்ப்பரத்வம், நிஸ்ஸம்ஶயத்வம், முதலியவைகளும், அதினால்

ஸ்வாமித்வம். ஸர்வஸ்வங்களையும்விட்டு என்கிற விரண்டு வசனங்களாலே 1 'நின்னிலங்குபாதமன்றி மற்றோர் பற்றிலேனெமீசனே' என்கிறபடியே ஸஹிதவஸிக்கு உபாயாந்தர மற்றிருக்கிற வதிகாரிவிசேஷத்தையாதல், ஆகிஞ்சந்யத்தினுடைய

ப்ரீத்யதிசயமும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. அதுவும் இங்குற்ற பலோத்கமம் என்னுமிடம் கத்ய பாஷ்யாதிகளில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. மேலே பதங்களுக்கு அடைவே தாத்பர்யம் அருளிச்செய்கிறார்—'ஸர்வஸ்வங்களையும் விட்டு' என்றாரம்பித்து. அதில் ஆகிஞ்சந்யமாகிற அதிகாரம் சொல்லப்படுகிறது. அதாவது அபிமத பலத்திற்கு அவன் திருவடியைத் தவிர வேறு உபாயம் ஒன்றுமில்லாதவனா யிருக்கை. அது இவனுக்கு ஜ்ஞான சக்த்யாதிகள் இல்லாமையினாலாகவுமாம், விளம்பாக்ஷமதையாலாகவுமாம் என்கிற அர்த்த விசேஷத்தைத் திருவுள்ளம்பற்றி அதற்கு உபபாதகமாக திருமழிசைப் பிரான் ஸ்ரீஸூக்தியைக் காட்டியருளுகிறார்—'நின்னிலங்கு' என்றாரம்பித்து. நின் - உம்முடைய, இலங்கு - ப்ரகாசித்துக்கொண்டிருக்கிற, பாதமன்றி - திருவடிகளைத் தவிர, மற்று ஓர் - வேறொரு, பற்று - அவலம்பனம், ஆஶ்ரயிக்கக்கூடிய வஸ்து, இலேன் - இல்லாதவன், எம் ஈசனே - எமக்கு அஸாதாரணமான ஸ்வாமியே. இந்த ஸம்போதனம் 'த்ராணே ஸாமர்த்ய ...' என்றிவை முதலியவைகளிற்படியே தன்னைத்தான் ரக்ஷித்துக்கொள்ள அசக்தனையும், அப்ராப்தனையும் இருப்பதையும், ஶ்ரிய:பதி ப்ராப்தனையும் சக்தனுமிருப்பதையும் விவக்ஷித்துக் கீழ்ச்சொல்லிய ஆகிஞ்சந்யத்வத்திற்குக் காரணத்தை ஸ்திரப்படுத்துகிறது. 'இலங்குபாதம்' என்கிற இடத்தில் 'இலங்கு' என்னும் பதத்தினால் ஆஶ்ரிதர்களை ரக்ஷிப்பதினால் வந்த தேஜஸ்ஸு விவக்ஷிதம். 'ஸஹித வஸிக்கு' இத்யாதிக்குத் தனக்கு இஷ்டமான பலம் ஸித்திப்பதற்கு உபாயாந்தரமற்றிருக்கிற, அதாவது ப்ரபத்தியை அல்லது அந்த ஶ்ரிய:பதியினுடைய திருவடிகளைத்தவிர மற்றொரு உபாயாந்தரம் இல்லாதவனா யிருக்கிற என்றர்த்தம். '...' '...'

---

1 திருச்சந்த விருத்தம்-90.

யதேச்சாதாநாபேக்ஷாதிகளையாதல் சொல்லுகிறது. என்னையொருவனை என்கிறவிரண்டு பதங்களாலே ஸௌலப்யாதி குணவிசிஷ்டமாய் ஸ்வயாதநாவாயத்வ நிரபேக்ஷத்வ

ஸர்வஜ்ஞஸ்ய ஸ்வதந்த்ரஸ்ய ந தேஶகாலௌ ஸமவேக்ஷ்யதே ஸாத்யஸாதந ஸாமாந்யே' என்றிவை முதலியவைகளை இங் கனுஸந்திப்பது. 'ஸ்வதந்த்ரியினுடைய யதேச்சாதாநாபேக்ஷ'மாவது தனக்கு ஸஹாயமாக ஒரு தர்மங்களையும் எதிர்பாராத ஸ்வபாவம். தனக்கு அங்கமாக ஶாஸ்திரங்களில் விதிக்கப்படுகிற ஆநுகூல்யஸங்கல்பாதி அங்கபஞ்சகங்களைத் தவிர வேறொன்றையும் எதிர்பாராத ஸ்வபாவமாகவுமாம். 'என்னை யொருவனை' என்கிற இரண்டு பதங்களாலே' என்பதற்கு அந்த அர்த்தத்தைச் சொல்லுகிற 'மாமேகம்' என்கிற இரண்டு பதங்களினாலே என்றர்த்தம். 'ஸௌலப்யாதி குண விசிஷ்டமாய்' என்பதற்கு ஸர்வலோகங்களுமறியும்படி ஸர்வேஶ்வரனை தன்னை ஸாரதியாக்கினவன் வார்த்தை யாகையினாலும் ப்ரபத்திக்கு உபயோகமுள்ளதாகையினாலும் ஸௌலப்யம் முதலிய குணங்களையுடைய பகவானிடத்தில் 'மாம்' என்பதற்குத் தாத்பர்யம் என்றர்த்தம். 'ஸ்வயாதநாவாயத்வ'மாவது இந்த ஜீவாத்மா ப்ரபத்தியில் தான் கர்த்தாவாயிருந்தபோதிலும், இந்த ப்ரபத்தி ரக்ஷணத்திற்கு ஸாதனமாயிருந்தபோதிலும், இவைகளைத் தன்னுடன் சேர்த்துச்சொல்ல முடியாதபடி தான், முக்யமான கர்த்தாவுமாய், முக்யமான காரணமுமாய் நிற்கும் ஸ்வபாவம். இவன் 'ஸ்வயாநகத்வ' வாகையாவது ஜந்மாந்தர ஸுக்ருத ஸுக்ருத விஶேஷங்களினால் ப்ரஸந்நனை தான் ஸம்யக்ஜ்ஞானத்தையும் கரணகளேபராதிகளையும் கொடுத்துத்தான் சொல்லிய நல்வழியில் நடத்துகை. 'ஸ்வாநவாய' மாகையாவது ப்ரபத்தி முதலிய உபாயங்கள் அசேதனங்களாய் அவனுடைய ப்ரஸாதத்திற்குக் காரணங்களாய்த் தான் பரமசேதனனாய் அவைகளினால் ப்ரஸாதநீயனாயிருக்கை. 'நிரபேக்ஷத்வ' மாவது ஒருவித ஒத்தாசைகளையும் எதிர்பாராமல் தன் ஸங்கல்ப மாத்திரத்தினாலேயே நினைத்ததுஸாதிக்க வல்லனாயிருக்கை. 'ஸர்வஶரண்யத்வ' மாவது ப்ரபத்தியினால் வஶீக்ருதனை தான் ஒருவனே எல்லாப்

ஸர்வஜ்ஞத்வாதி விசிஷ்டமான ஸநாதந தர்மத்தைக்காட்டுகிறது. ஶரணமாகப்பற்று என்கிறஇரண்டுபதங்களாலே மஹாவிஶ்வாஸாதி விசிஷ்ட பரந்யாஸத்தைவிதிக்கிறது. நானுன்னை என்கிற விரண்டு பதங்களாலே பரஸ்வீகாரம் பண்ணின ஸர்வஶக்தியையும் ந்யஸ்தபரனான வாத்ஸல்யத்தியை

பலங்களையும் கொடுக்கக்கூடிய ஶக்தியை யுடையவனாயிருக்கை. இங்கிருக்கிற 'ஆதி' ஶப்தத்தினால் உபாயமாகிய தானே ப்ராப்யமாயிருக்கை முதலியது சேர்த்துக்கொள்ளப்படுகிறது. 'ஸநாதநதர்ம'மாவது நம்மால் அனுஷ்டிக்கப்படுகிறதாய் அதினால் ஸாத்ய தர்மமென்று பெயர்பெற்ற பக்தி ப்ரபத்தி முதலியவைகளைவிட வேறு பட்டதாய் ஒருவராலும் செய்யப்படாததாகையினால் ஸித்த தர்மமென்று பெயர் பெற்ற ஶ்ரிய:பதி. இங்கு 'ஏகம்' என்கிற இடத்தில் நிரபேக்ஷத்வ அர்த்தமாகக் கொள்ளில் 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' என்கிற இடத்தில் இந்த அர்த்தத்தைதவிர்ந்து ஆகிஞ்சந்யமாகிற அர்த்தத்தை அங்கீகரித்தல், அவ்விடத்தில் நைரபேக்ஷ்யத்தை அர்த்தமாகக் கொள்ளில் 'ஏகம்' என்கிற இடத்தில் அதைத் தவிர்ந்து ஸர்வபல ப்ரதத்வாதிகளை அங்கீகரித்தல் வேண்டுமாகையினால் புனருக்த்யாதி தோஷமில்லை என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் நிர்ணீதம். 'ஶரணமாகப்பற்று' என்றாரம்பிக்கும் வாக்யத்திற்கு 'ஶரணம் வ்ரஜ' என்பது அத்யவஸாயத்தை மாத்திரம் சொன்னபோதிலும் ப்ரமாணாந்தர ப்ரஸித்தியினாலும் இங்கு உபாயத்வ வாசக ஶரணஶப்தமிருக்கிறபடியினாலும் அங்கபஞ்சக விஶிஷ்டமான பரந்யாஸத்தை விதிக்கிறதென்று தாத்பர்யம். 'நானுன்னை' என்றாரம்பிக்கும் வாக்யத்திற்கு பூர்வார்த்தத்தில் இருக்கும் 'மாம்' என்னும் பதத்தினால் எல்லோராலும் ஆஶ்ரயிக்கத் தகுந்தவனாயிருப்பதற்காக ஸௌலப்யாதிகள் விவக்ஷிதமாக இருந்தபோதிலும் உத்தரார்த்தத்தில் ஸர்வபாபங்களையும் தான் நினைத்தமாத்திரத்தில் விலக்கவல்லா ரொருவருமில்லாமல் ஶரணாகதனுடைய ப்ரார்த்தனைப்படி தான் நினைத்தபோதே விடுவிப்பதற்கு அனுகுணமான ஸர்வஶக்தியையும், 'த்வா' என்பதினால் இப்படி ஸர்வஶக்தி ஒருவன் ரக்ஷித்தாலன்றி மார்க்காந்தரமில்லாமல் அவன் கையையே எதிர்பார்த்திருக்கும் ஆஶ்ரிதனையும் சொல்லுகிறது. 'ஸர்வ

யும் சொல்லுகிறது. எல்லாப் பாபங்களினின்றும் விடுவிக்கக் கட வேன் என்கிற விரண்டு பதங்களாலே கைங்கர்ய விரோதி களை நிஶ்ஶேஷமாகக் கழிக்கும்படியைச் சொல்லுகிறது. ஶோகிக்க வேண்டாம் என்கிற விரண்டு பதங்களாலே புகலற்றுத்தளும்பின பூர்வாவஸ்தையை விலக்கி 'நிஸ்ஸம்ப்ரமஸ்ஸுகமாஸ்ஸ்வ' என் றருளிச்செய்த உத்தராவஸ்தையை உபலக்ஷிக்கிறது. அயத்தில்

வ்ருத்தி'யாவது சாதகபக்ஷி எப்படி மேகத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதோ மற்று வேறு ஒரு இடத்தில் தண்ணீரைக் குடிக்கிறதில்லையோ, அதைப்போலமற்றவர்களிடத்தில்காப்பாற்று வதை எதிர்பாராமல் பகவான் கையையே எதிர்பார்த்திருப்பது. 'எல்லாப் பாபங்களினின்றும்' என்றாரம்பிக்கும் வாக்யத்தினால் பாப சப்தத்தில் பஹுவசனமும், ஸர்வஶப்தமும் இருப்பதினால் பாபங்கள் அநந்தமென்பதும், அவைகளை வாஸனாருச்யாதிக ளோடு போக்குகிறேன் என்பது மேற்படுகின்றபடியினால் பாப ஹேதுக்களும் கழிகையாலே இனிப் பாபங்கள் ஒன்றும் புகுராதபடி நிஶ்ஶேஷமாகக் கழிந்தபடி சொல்லப்படுகிறது. 'ஶோகிக்கவேண்டாம் என்கிற இரண்டுபதங்களாலே' என்பதற்கு 'மாஶுச:' என்கிற இரண்டு பதங்களாலே என்றர்த்தம். 'புக லற்று' என்பதற்குக் கதியில்லாமல் என்றர்த்தம். புகல்-ஆஶ்ரயிக் கத்தகுந்த இடம். தளும்பின - துக்கித்துக்கொண்டிருந்த. 'பூர்வா வஸ்தை'யாவது ப்ரபத்தி செய்வதற்கு முந்தியிருந்த தஶை. அதை 'விலக்குவ'தாவது அது கழிந்துவிட்டதென்று தெரி விக்கை. உத்தரதஶையில் நிஸ்ஸம்ப்ரமனாய் நிர்ப்பரனாயிருக் கும்படியை ஶ்ரிய:பதி யருளிச்செய்கிறான் என்பதற்கு யதீஶ ரங்கேஶ ஸம்வாதரூபமாகிய ஶரணாகதி கத்யத்தில் பகவா னுடைய வாக்யத்தை ப்ரதிபாதிக்கிற வாக்யத்தை ஸம்வாத மாக அருளிச்செய்கிறார்—'நிஸ்ஸம்ப்ரமஸ்ஸுகமாஸ்ஸ்வ' என்று. இங்கு நிர்ப்பரத்வம், நிர்ப்பயத்வம், நிஸ்ஸம்ப்ரமத்வம் மூன்றும் விவக்ஷிதங்களென்று வ்யாக்யானம் செய்யப்பட்டது. 'உபலக்ஷிக்கிறது' என்பதற்கு மேல்வரும் நிரபராத கைங்கர்யம் முதலிய [1]பலோத்கமபரம்பரைகளெல்லாம் இதற்குள்ளே அந்

---

1 ஶரணாகதி கத்யம்.

ஸர்வேஶ்வராத்ர வர்ணங்களுக்கு இதில் ஸர்வேஶ்வராத்ராஜங்கள் சேர்த்தியாகின்றன.

இதி த்வயோபாயாதிகார: ஸம்பூர்ண:.

தர்கதங்கள் என்று தாத்பர்யம். 'த்வயத்தில் ஸர்வேஶ்வராத்ர வர்ணங்களுக்கு இதில் ஸர்வேஶ்வராத்ராஜங்கள் சேர்த்தியாகின்றன' என்பதின் கருத்தாவது—த்வயத்தில் இருக்கும் 'ஶ்ரீமத்', 'நாராயண', ஶப்தங்கள் 'மாம்' என்பதினால் வ்யாக்யாதங்கள். அவ்விடத்தில் லக்ஷ்மீ ஸம்பந்தமும் ஆஶ்ரயணீயத்வோபயுக்தமான ஸௌலப்யாதி குணயோகமும் விவக்ஷிதங்கள். இங்கும் 'மாம்' என்கிற இடத்தில் அவைகள் விவக்ஷிதங்கள். மேலும் 'ஸஏஷ நாராயண: ஶ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந: நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்' என்று சொல்லியிருப்பதினால் ஸ்ரீமந்நாராயண ஶப்தத்திற்கு அர்த்தம் இங்கு 'மாம்' என்று சொல்லுகிற கண்ணனே என்று தாத்பர்யம். 'ஏக' ஶப்தத்தின் அர்த்தம் 'சரண' ஶப்தத்தின்மேல் அத்யாஹரித்துக்கொள்ள வேண்டியதாக பூர்வாசார்யர்களருளிச் செய்திருக்கிற ஸஹகாரார்த்தத்தை அநுவதிக்கிறது. 'ஶரணம் வ்ரஜ' என்பது எதிரில் இருக்கும் அர்ஜுனனைக் குறித்து உபதேஶரூபமாக ப்ரவர்த்திதமாகையினால் மத்யமபுருஷனாயும், 'ஶரணம் ப்ரபத்யே' என்பது அநுஷ்டான காலத்தில் கர்த்தாவினுடைய அநுஸந்தானமாகையினால் உத்தம புருஷனாயுமிருந்தபோதிலும் இவை இரண்டிற்கு மர்த்தமேக ரூபம். அதில் உத்தமனில் விவக்ஷிதமான ஆகிஞ்சந்யத்தை விவரணம் செய்கிறது—'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' என்கிற பாகம். ஆக த்வயத்தின் பூர்வகண்டமும் சரமஶ்லோகத்தின் பூர்வார்த்தமும் ஏகார்த்தமாயிற்று. இனி உத்தரகண்டத்தில் அநிஷ்ட நிவ்ருத்தியைச் சொல்லுகிற நமஶ்ஶப்தம் த்வயத்தில் பின்னிட்டிருந்தபோதிலும் அர்த்த க்ரமத்தை யநுஸரித்து இதில் முன்னால் ப்ரதிபாதிதமாயிற்று. அவ்விடத்தில் ஶ்ரிய:பதியான பகவானுடைய திருவடிகளில் கைங்கர்யமாகிற புருஷார்த்தம் நிரூபிக்கப்பட்டது. இங்கு இங்குண்டாகிற உத்தராவஸ்தை

குறள் வெண்பா.

மூன்றிலொரு மூன்று மூவிரண்டு முந்நான்குந்
தோன்றத் தொலையுந் துயர். 4

ப்ரதானமாக மற்ற பல பர்வங்கள் உபலக்ஷிக்கப்பட்டன. ஆக த்வயத்தின் உத்தரகண்டத்திற்கு சரமஶ்லோகத்தின் உத்தரார்த்தம் சேர்த்தியாயிருக்கிறது—என்பது.

சரமஶ்லோகாதிகார வ்யாக்யானம் முற்றிற்று.

இப்படி இந்த ரஹஸ்யத்தில் அருளிச்செய்த அர்த்த விஶேஷங்களைத் தெரிந்தவர்களுக்கு ஸர்வ துக்க நிவாரண முண்டாகுமென் றருளிச்செய்கிறார்—'மூன்றில்' என்றாரம்பித்து. மூன்றில் - ரஹஸ்யத்ரயத்தில், ஒரு - அத்விதீயமான, மூன்றும் - மூன்று பதங்களடங்கிய திருமந்திரமும், அன்றிக்கே, ஒரு - ஒரு அர்த்தத்தை ப்ரதிபாதிக்கிற, மூன்றும்-மூன்றுபதங்களடங்கிய திருமந்திரமும், மூவிரண்டும் - ஆறுபதங்களையுடைய த்வயமும், முந்நான்கும் - பன்னிரண்டுபதங்களையுடைய சரமஶ்லோகமும், தோன்ற - அர்த்தத்துடன் ப்ரகாசிக்க, துயர் - துக்கங்கள், தொலையும் - நசித்துவிடும். 'மூன்றில்' என்பதினால் வித்யாஸ்தானங்கள் பதினெட்டு, புராணங்கள் பதினெட்டு, என்னுமாப்போலே ஜ்ஞாதவ்யாம்ஶம் பஹுவாயிருக்கை யன்றிக்கே சுருக்கமாய் மூன்றாயமைந்தமை சொல்லப்படுகிறது. அதில் 'ஒரு மூன்றும்' என்பதினால் ஜ்ஞாதவ்யாம்ஶம் ஸங்கையினால் அல்பமாயிருந்தபோதிலும் அநந்தமாய் ஸபர்தலக்ஷம், 'யத்விந்து ஸகலஸஹஸ்ராணி ஶாஸ்த்ராணி ...' இத்யாதிகளைப் போல் கரைகட்டாக் காவிரிபோல் பரந்து கிடக்குமாகில் அல்பஶக்திகளான நம் போலியர்களால் அறியமுடியாது என்று ஶங்கிக்க வடுக்குமே அது நிவ்ருத்தியாகிறது. ஆக இத்தால் 'அநந்தபாரம் பஹுவேதிதவ்யம்' என்று சொல்லப்பட்ட இரண்டு குறைகளுமில்லை என்று த்யோதிதமாயிற்று. ஒரு மூன்றும்—அத்விதீயமான மூன்றும். ஒரு எழுத்து ஒருபதமாய், இரண்டெழுத்து ஒருபதமாய் இப்படிச் சேர்ந்த ஸௌகர்யாதிஶயம் சொல்லப்படுகிறது. மேலும் இப்படிப் பதங்கள் சுருக்கமாயிருந்தபோதிலும் ஜ்ஞாதவ்யங்களான ஸர்வார்த்தங்களையும்

தெரிவிக்கக்கூடியதான பதங்களின் வைலக்ஷண்யம் சொல்லப்படு கிறதாகவுமாம். அன்றிக்கே ஶ்ரிய:பதியின் பெருமையைவிட மேற்பட்டதான திருவஷ்டாக்ஷரத்தின் பெருமையை நினைத்து 'ஒரு மூன்றும்' என்றருளிச் செய்திருக்கிறதாகவுமாம். அதுவு மன்றிக்கே திருமந்திரம் முழுமையும் ஸ்வரூபபரமாகையினால் ஆத்மஸ்வரூபமாகிற ஒரு அர்த்தத்தை ப்ரதிபாதிக்கிற மூன்று பதங்கள் என்றாகவுமாம். அதுவுமன்றிக்கே திருமந்திரம் தத்வ ஹித புருஷார்த்தங்களை ப்ரதிபாதிக்கிறது என்று ஸம்ப்ரதாய மாகையினால் ஒரு மந்திரத்தில் இருக்கிற மூன்று பதங்களும் அடைவே தத்வம், ஹிதம், புருஷார்த்தம், இவைகளை ப்ரதிபாதிக்கிறது என்றாகவுமாம். மூவிரண்டும் மூன்று மூன்று பதங்களடங்கிய இரண்டு பாகமாகிய த்வயம். இங்கு 'கட வல்லியில் இது பிரியவோதி சேர்த்தனுஸந்திக்க விதிக்கையினா லும்' என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் அருளிச்செய்யப்பட் டிருப்பதினால் மூன்று பதங்களடங்கிய இரண்டு பாகங்களாகவே இந்த மந்திரம் உத்பன்னமானது என்று தோற்றுகைக்காக 'மூவிர ண்டு' என்றருளிச் செய்யப்பட்டதாகவுமாம். மூன்று பதங்கள் சேர்ந்து ஹிதத்தையும், மூன்று பதங்கள் சேர்ந்து புருஷார்த்தத் தையும், ஆக இரண்டும் சேர்ந்து இரண்டர்த்தத்தை ப்ரதி பாதிக்கிறபடியினால் 'மூவிரண்டும்' என்றருளிச் செய்யப்பட்ட தாகவுமாம். அப்படியே ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் 'இம்ஜெ ஸஹரதஶ்ரணை ஶாஶ்வம்', 'ஶ்வாம்ஸ்தஸ ஸஹ பெஷெஹூா' என்கிற ஶ்லோக த்வயத்தில் விவக்ஷிதமான உபாயோபே யாத்யவஸாயத்வயத்தை ஹேதுவாக்கிக்கையாலே த்வயமென்று பேர் பெற்றது' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. 'முந் நான்கும்' என்பதற்கு சரமஶ்லோகத்தில் 'மாமேகம்' வரையி லாக நாலுபதங்களினால் அகிஞ்சனாதிகாரத்வமும், நைரபேக்ஷ்ய மும், த்யாஜ்யபஹுத்வமும், பரிக்ராஹ்ய ஏகத்வமும் சொல்லப் பட்டன. 'மோக்ஷயிஷ்யாமி' என்கிற வரையில் உத்தரார்த்தத்தில் நாலுபதங்களினால் ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தி பூர்வபலமும், அதுதன் னாலேயே செய்யப்படுவது என்பது முதலியவைகளும் சொல்லப் பட்டன. 'ஶரணம் வ்ரஜ, மாஶுச:' என்கிற நாலு பதங்களி னால் அதிகாரியின் கர்த்தவ்யமும் சொல்லப்பட்டது. இப்படி நாலு பதங்களாகச்சேர்ந்து ஒருஅர்த்தத்தை ப்ரதிபாதிக்கிறபடியினாலே

இதி தத்த்வத்ரயஸ்யைஷா ரஹஸ்யத்ரிதயஸ்ய ச ।
பதவீ வேங்கடேசேந ஹ்ருத்யைராவிஷ்க்ருதா ॥

மூன்று நாலு பதங்களும் மூன்றர்த்தத்தை ப்ரகாசிக்கிறதாகை யினால் 'மூந்நான்கும்' என்றருளிச் செய்யப்பட்டது என்று தாத் பர்யம். ஸ்ரீகீதையில் பன்னிரெண்டத்யாயங்களை விவக்ஷிதமான கர்மயோக ஜ்ஞானயோக பக்தி யோகங்களை நிரூபிக்கிறது. மேல் ஷட்கம் கீழ்ச்சொன்ன அர்த்தங்களை விசதமாக்குகிறது என்று கீதார்த்த ஸங்க்ரஹத்தில் 'கர்மயோகஸ்தபஸ்தீர்த்த' ... என்றருளிச் செய்யப்பட்டிருப்பதினால் அப் படி உபாயவிதாயகமாகிய பன்னிரண்டு அத்யாயங்களின் ஸாராம் சத்தை அல்லது பன்னிரண்டு அத்யாயங்களில் சொல்லப்பட்ட தை விட உயர்ந்ததான ப்ரபத்தியாகிற உபாயத்தை ப்ரதிபாதிக் கிறபடியினால் இந்தப்பன்னிரெண்டு அத்தியாயத்திற்குள்ள பெரு மை இந்த ச்லோகத்திற்குள்ளடங்கியது என்று தாத்பர்யமாகவு மாம். 'தொலையும்துயர்' என்பதற்கு முதலில் உபாயம் அறியப்படா மையினால் உண்டான துக்கம், உபாய மனுஷ்டியாமையினால் உண் டாகிய துக்கம், பலத்தில் ஸம்சயம் முதலியவைகளினால் உண் டாகிய துக்கம், இப்படிப்பட்ட பூர்வாபரமத்யம தசைகளில் வரக்கூடிய துக்கங்களெல்லாம் நசித்துவிடும் என்று தாத்பர்யம். இதில் பதங்களில் அடைவே 'ஒரு மூன்று', 'மூவிரண்டு', 'மூந் நான்கு', என்று ரஹஸ்யத்ரயங்களைக் குறிப்பிட்டிருப்பதினால் இந்த ரஹஸ்யத்திலேயே த்வயாதிகாரத்தின் ஆரம்பத்தில் 'இப் படி ரஹஸ்யத்ரயம் உத்தரோத்தரம் வடிங்கள் இரட்டிப்பாய் விசதீகரணமாயிருக்கும்' என்றருளிச் செய்திருக்கும் அர்த்த மும் விவரிக்கப்பட்டது.

இப்படி தத்வபதவீ, ரஹஸ்யபதவீ, என்கிற ரஹஸ்யங்களை பகவத் ப்ரீத்யர்த்தமாகத் தாமருளிச்செய்து இதுக்குக் கர்த்தா பகவானே என்று ஸாத்விகத்யாகம் செய்தருளா நின்றுகொண்டு கீழ் 'தொலையுந்துயர்' என்று அநிஷ்ட நிவ்ருத்தியை மாத்திரம் சொல்லியிருக்கிறபடியினால் இஷ்ட ப்ராப்தியாகிற பலத்தையும் சொல்லி நிகமனம் செய்தருளுகிறார்—'இதி' என்கிற ச்லோகத்தி னால். ஏஷா - இந்த, தத்வத்ரயஸ்ய - சித், அசித், ஈச்வரன், ஆகிய மூன்று தத்வங்களினுடையவும், ரஹஸ்ய த்ரிதய

ஸூவ திருமந்திரம், த்வயம், சரமஶ்லோகங்களாகிற மூன்று ரஹஸ்யங்களினுடையவும், ப்ரதீசீ ப்ராசீ கிழக்கு மேற்காக இருக்கிற, ப்ரத்யக் என்கிற ஜீவாத்மாவை அடைவதற்குக் காரணமாயிருக்கிற, பத்வீ - மார்க்கமானது, வேங்கடேஶேந வேங்கடேஶனென ஸ்ரீநிவாஸனால், அன்றிக்கே வேங்கடேஶனென்கிற திருநாமத்தையுடையதனால், இதி இந்த ப்ரகாரம், ப்ரதர்ஶிதா - காண்பிவிக்கப்பட்டது. இவ்விடத்தில் 'பத்வீ' என்பதற்கு இவைகளில் வக்தவ்யாம்ஶங்கள் மிகவும் அதிகமாயிருக்கிறபடியினால் இதில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது திங்மாத்திர ப்ரதர்ஶநம் என்று தாத்பர்யம். 'வேங்கடேஶேந' என்பதற்கு இதற்குத் தான் வக்தாவல்ல, பகவான் அந்தர்யாமியாயிருந்து பிழையறப்பேசுவித்த பாசுரங்கள் என்று திருவுள்ளம். அன்றிக்கே இந்த ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரதம ப்ரவர்த்தகன் ஶ்ரிய:பதியாகையினால் இதில் ஒருவிதமான தோஷங்களும் ஶங்கிக்க இடமில்லை என்று திருவுள்ளமாகவுமாம். 'ப்ரதீசீ ப்ராசீ' என்பதற்கு மேற்குதிக்கு ஆரம்பிவித்து கிழக்காகப் போகிற மார்க்கத்திற்கு'ப்ரதீசீ ப்ராசீ'என்றுபெயர். எப்படி மேற்கில் வெகுதூரமிருந்து புறப்பட்டு கிழக்குதிக்கை நோக்கிப்போகும் வெகுதூரமான வழியை ஒருவன் இந்த ஊருக்குப்போகிற வழி இதுதான் என்று கையினால் குறிப்பிட்டு காட்டும்பொழுது அந்த வழி முழுதும் காட்டினதாகாதோ அதைப்போல இங்கும் ரஹஸ்ய தத்வத்ரயங்களின் அர்த்தம் முழுவதும் சொல்லப்படவில்லை. வழிமாத்திரம் காட்டப்பட்டது என்று தாத்பர்யம். இந்த க்ரந்த பரமான யோஜனையில் 'ப்ரத்யஞ்சம் ப்ராஞ்சதி இதி—ப்ரதீசீ ப்ராசீ'—ஜீவாத்மாவை அடைகிறது, அதாவது இந்த வழியாக பரிசுத்த ஜீவாத்மாவினிடத்தில் சேர்க்கிறது. அதில் 'ப்ர' என்கிற உபஸர்க்கத்தினால் 'ப்ரகர்ஷேண அஞ்சதி' என்றர்த்தமாய் ஜீவாத்மாவின் உள்ளபடியான தன்மையை யடைந்திருக்கிறது. எப்படி ஒரு பாதையானது தான் எந்த ஊரை அடைந்திருக்கிறதோ, தன்மேல் நடப்பவனையும் அந்த ஊருக்கு நடத்திவைக்கிறதோ, அதைப்போல இந்த ஆத்மாவும் ஸர்வாநிஷ்டநிவ்ருத்தமாய் ப்ரக்ருதி ஸம்பந்தமற்று ஸ்வாபாவிகமான கைங்கர்யமாகிற புரு

ஸ்ரீரங்காதிபவ்ருஷாத்ரிப்ரமுகேஷு
ஸ்தாநேஷு ஸ்திர விபவா ஸமஸ்தயாத்ரா |
ஸுஸ்பஷ்டம் வரத வியுக்த தோஷலேஶா
ஸம்பத்ஸ்யா ஸததமகம்பமேவ ஸம்யாக் ||

இதி கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஸ்ரீமத்ரஹஸ்யபதவீ ஸம்பூர்ணா.

கவிதார்க்கிகஸிம்ஹாய கல்யாணகுணஶாலிநே |
ஸ்ரீமதே வேங்கடேஶாய வேதாந்தகுரவே நம: ||

|| ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம: ||

சீரார் தூப்புற்றிரு வேங்கடமுடையான் திருவடிகளே ஶரணம்.

ஷார்த்தத்தை அடைந்திருக்கிற ஜீவாத்மாவை அடைவிக்கிறது என்று தாத்பர்யம். ‘ஏஷா ப்ராஹ்மீஸ்திதி: பார்த’, ‘ஏவம் பஹுவிதா யஜ்ஞா விததா ப்ரஹ்மணோ முகே’ என்றிவை முதலியவைகளை இங்கு அநுஸந்திப்பது.

இப்படி ஸத்ஸம்ப்ரதாயத்தின் பெருமையையும், அதினால் தத்வத்ரயஜ்ஞானம் உண்டாகிற ப்ரகாரத்தையும், அதன் மூலமாக ரஹஸ்யத்ரயார்த்தாநுஸந்தானம் பண்ணி உபாய நிஷ்டனாய் புருஷார்த்தத்தை அடைகிற ப்ரகாரத்தையும், மூன்று ரஹஸ்யங்களினால் சுருங்க அருளிச்செய்து, இப்படித்தாமருளிச் செய்தபடியே ஸத்ஸம்ப்ரதாய நிஷ்டர்களாய் ஸதாசார்ய கடாக்ஷம் பெற்று தத்வத்ரய ரஹஸ்யத்ரய ஜ்ஞானம் பிறந்து ப்ரபன்னர்களாய் ஸ்வயம்ப்ரயோஜன பகவத் கைங்கர்யமாகிற உத்தரக்ருத்ய நிஷ்டர்கள் ஸம்ருத்தமாக இருக்கவேண்டுமென்கிற திருவுள்ளத்தினால் அப்படிப்பட்ட ஸ்வயம் ப்ரயோஜனகைங்கர்யபர ப்ரபன்ன பரமைகாந்திகளினால் செய்யப்படுகிற கைங்கர்யங்கள் அவைகளுக்கு ஆந்தர பாஹ்ய விரோதிகளுமில்லாமல் தேவரீருடைய க்ருபையினாலேயே ஸ்ரீரங்காதி உகந்தருளின திவ்ய தேஶங்களில் அபிவ்ருத்தமாகச் செல்லவேண்டுமென்று ஶ்ரிய:பதியை

ப்ரார்த்தித்து மங்களாஶாஸநரூபமாக ஒரு ஶ்லோகம் அருளிச் செய்கிறார்—'ஶ்ரீரங்க' என்றாரம்பித்து. வரத - பக்தர்களுக்கு அபீஷ்டங்களைக் கொடுக்கும் பகவானே, ஶ்ரீரங்க ஸ்ரீரங்கம், வாரதவாரணாத்ரி - ஹஸ்திகிரி, வேங்கடாசலம், வைகுண்ட க்ஷேத்ர - இவை முதலான, ஸ்வாபிமத க்ஷேத்ர - உகந்தருளின திவ்ய தேஶங்களில், ஸமஸ்ததோசித - உம்முடைய திருவாராதனம், உமக்குக் கீழ்க்கூறிய ப்ரபன்ன பரமைகாந்திகளினால் செய்யப் படும் கைங்கர்யங்கள், ஸமேதமாக - அதிகமான, ஸம்ருத்தி ... ஸமேதமாக - உம்முடைய க்ருபையினாலேயே, ஆகல்பம் - கல்ப காலம் வரையிலும், விதூத - போக்கடிக்கப்பட்ட, ப்ரதிபக்ஷா - ஶத்ருக்களினுடைய பக்ஷத்தை உடையதாகவும், ஸ்திரஸ்ரீ ஸ்வா - அழிவில்லாத ஐஶ்வர்யங்களோடு கூடினதாகவும், ஸம்ருத்தா - இருக்கவேண்டும் (என்று ப்ரார்த்தனை). உம்முடைய ஆராதன கைங்கர்யங்கள் திவ்ய ஸ்தலங்கள் தோறும் அழிவில்லாமல் நடக்கவேண்டுமென்று ப்ரார்த்தித்தால் ஆராதகர்களான பரமை காந்திகளின் ஸம்ருத்தியும் ப்ரார்த்தித்ததாக ஏற்படு கிறது. பாகவத ஸம்ருத்தியை ப்ரார்த்தித்தனால் ப்ரயோஜனாந்தர ஸங்கம் வாராதென்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் நிர்ணீதம்.

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பாவத்விஷயம்
ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்யார் ஸ்வாமிகளினால்
செய்யப்பட்ட
ஸ்ரீமத் ரஹஸ்ய பதவீ வ்யாக்யானம்
முற்றிற்று.

